# நீல. பத்மநாபன், இல் - அறம் சிறுகதையின் நடப்பியல் விமர்சனப் பார்வை

**தே. வித்யா**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)
முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, செய்யாறு

**மலர்:** 3
**இதழ்:** 4
**மாதம்:** ஏப்ரல்
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

### முன்னுரை

தமிழ்ச் சிறுகதை இலக்கிய வகைக்கு நூற்றாண்டு வரலாறு உண்டு. பாரதி தொடங்கி வ.வே.சு.ஐயர் முதலாகப் புதுமைப்பித்தன், கு.ப.ரா., ஜெயகாந்தன், சுந்தரராமசாமி போன்ற சிறுகதை மேதைகளின் கை வண்ணங்களின் வழியாக உருவான தமிழ்ச் சிறுகதை என்ற ஒளிச்சுடரைத் தூக்கிப்பிடித்த படைப்பாளிகளில் குறிப்பிடத்தக்கவர் நீல பத்மநாபன். அண்டை மாநிலமான கேரளத்தில் வாழ்ந்துகொண்டு தமிழில் இலக்கியம் படைத்தவர் நீல பத்மநாபன். இவரது எழுத்துமுறை, தமிழ் நவீன இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க போக்கினைப் பிரதிபலிக்கிறது. சிறுகதையுலகத்திற்குள் நுழையும்போது அதில் பலவித அனுபவங்கள் காத்திருக்கின்றன. பரந்து விரிந்த அறிவு, அனுபவப் பிரபஞ்சத்தினை அதில் வாசகனால் தரிசிக்க முடிகின்றது. எத்தனைவிதமான மனிதர்கள்! எத்தனை பண்புகள்! நல்லவர்கள்! தீயவர்கள்! இரங்கத் தகுந்தவர்கள்! சிந்திக்க வைப்பவர்கள்! என்று மனித உள்ளங்கள் புலப்படுகின்றன. நீல. பத்மநாபன் “இல்-அறம்” என்ற சிறுகதையில் அடித்தட்டு மக்களின் வாழ்வியல் அவலத்தினையும் மனிதர்கள் அறம் பிறழும் சூழலையும் புலப்படுத்தியுள்ளார்.

### குடும்பமும் சமூகமும்

குடும்பங்கள் சேர்ந்து வாழும் அமைப்பே சமுதாயம் எனப்படும். பல குடும்பங்கள் ஒன்றாக இணைந்து தங்களுக்குள் உறவுமுறைகளையும் கடமைகளையும் கட்டுப்பாடுகளையும், ஒழுக்க நெறிமுறைகளையும் வரையறையுடன் ஏற்படுத்திக்கொண்டு வாழும் முறைக்குச் சமுதாயம் என்று பெயர். எந்த மனிதனும் தனித்து வாழ இயலாது. மனிதர்கள் எந்தநிலையிலும் ஒருவரை ஒருவர் சார்ந்தே வாழ்கின்றனர். மனிதன் தனது தேவைகளுக்காகப் பிறரது உதவியை நாடியிருப்பது இன்றியமையாதது. தமது தேவைக்காகப் பல்வேறுபட்ட மக்கள் ஓரிடத்தில் குழுவாக ஒன்றுபட்டு வாழும் இடம் சமுதாயம் என்று அழைக்கப்படுகிறது. “மனிதர்களுக்குப் பல்வகைப் பொருள்களும் உதவிகளும் தேவைப்படும் போது ஓரிடத்தில் கூட்டாளியாக

இணைகின்றனர் இதனையே சமுதாயம் என்று கூறலாம்."[1] என்று சமுதாயத்திற்கு விளக்கம் அளிக்கிறார் சாமிநாத சர்மா. "சமுதாயம் என்பதற்கு மக்கள் தொகுதி, இனம் குறிப்பிட்ட தொழில் போன்றவற்றைச் சேர்ந்தவர்களுடைய தொகுதி"[2] என்று தமிழ் அகராதி சமுதாயத்திற்கு விளக்கம் தருகிறது.

**வறுமை**

சமுதாயத்தில் காணப்படுகின்ற அவலங்களுள் ஒன்று வறுமை. இதனைத் தீராத கொடிய நோய் என்றும் கூறலாம். இந்த வறுமைக்குக் காரணம் பொருளாதாரத்தில் காணப்படும் பெரிய வேறுபாடே ஆகும். இந்த வேறுபாடு பொருள் உள்ளவன், பொருள் இல்லாதவன் என்ற இடைவெளிக்கு வித்திடுகிறது. சமுதாயத்தில் மக்கள் அவரவர் மேற்கொள்ளும் தொழில்களுக்கேற்ப வருமானமும் வாழ்க்கை வசதியும் அமைகின்றன. மருத்துவர்கள், பொறியாளர்கள், அரசு அலுவலகங்களில் பணிபுரிபவர்கள், ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு அவர்களின் தொழில்கள் மூலம் கிடைக்கும் வருவாய் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்திக்கொள்ளப் போதுமானதாக அமைகிறது. ஆனால் கீழ்மட்ட நிலையில் இருப்பவர்கள் பொருளாதாரச் சிக்கலையும் சிரமத்தையும் ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இதனால் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. நீல. பத்மநாபன், இல் - அறம் என்ற கதையில் அடித்தட்டு மக்களின் வாழ்க்கை முறைகளை நேர்த்தியாகக் காட்டியுள்ளார். வறுமையினால் வாழ்க்கையை இப்படித்தான் வாழ வேண்டும் என்று இல்லாமல் வாழ்கிறார்கள். கதையில் வரும் பங்கி என்ற பெண் வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதற்காக கொட்டுவடி பிஸினஸ் (சாராயம் விற்கும் தொழில்) செய்கிறாள். இந்த தொழிலுக்காகவே அவளை வாமன் திருமணம் செய்து கொள்கிறான். அந்தத் தொழில் செய்தும் அவள் நிம்மதியாக வாழவில்லை. வறுமையின் பிடியில் சிக்கி தவிக்கிறாள். வறுமையினால் எப்படி வேண்டுமென்றாலும் வாழலாம் என்ற நிலையில் குழந்தையை ஒருவனுடன் பெற்றுக் கொண்டு வேறொரு ஒருவனோடு குடும்பம் நடத்துகிறாள். "என் தங்கச்சியின் மாப்பிள்ளை ஒரு போலிஸ்காரன், அவன் தான் என் மொத புருசன்"[3] என்று சொல்கிறாள் பங்கி.

தனிமனிதனின் மனநிலை அவன் வாழும் சமுதாய அமைப்புக்கும் அது கொண்டுள்ள அறக்கோட்பாடுகளுக்கும் ஏற்பவே அமைகிறது. "மனிதனின் தன்னுணர்வு அவர்களின் இருப்பினை நிர்ணயிப்பதில்லை, மாறாக சமுதாயத்தில் அவர்களின் இருப்பே அவர்களுடைய தன்னுணர்வை நிர்ணயிக்கிறது."[4] என்ற கார்ல் மார்க்ஸின் கூற்று எல்லா சமுதாயத்திற்கும் ஏற்றதேயாகும்.

மனித சமூகத்தில் கடைபிடிக்கும் கோட்பாடுகள் காலப்போக்கில் ஏற்படும் அறிவியல் பொருளாதாரம், கல்வியியல், அரசியல் மாற்றங்களுக்குத் தக்கவாறு மாற்றம் பெறத்தக்கவையாகும். ஒருகாலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் ஆடவன் பல பெண்களோடு வாழலாம் என்றிருந்த கோட்பாடு, இன்று தண்டனைக்குரிய குற்றமாய்க் கருதப்படுகிறது. தமிழ்ச் சமுதாயத்தில் ஒருவரின் பாலியல் நடத்தையைக்கொண்டே அவரின் ஒழுக்கம் பெரிதும் மதிப்பீடு செய்யப்படுகிறது.

இல் - அறம் என்ற கதையில் வரும் பங்கி, தன் குடும்பத்தோடு சிறப்பாக வாழ நினைக்கிறாள். ஆனால் அவள் புருஷன் போலீஸ்காரன், அவளைவிட்டு அவள் தங்கையுடன் சென்று வாழ்கிறான். கணவன் ஒருவழி செல்ல தன் பிள்ளையோடு பங்கி வாமனுடன் வாழ்கிறாள். "எப்படியெல்லாமோ சொல்லிப் பார்த்தான். நான் மசியல்லே, கடைசியில் என் தங்கச்சியைக் கட்டிக்கிட்டு அவளோடு போய்ச்சேர்ந்தான்"[5] என்று ஒழுக்கம் தவறிய தன் கணவன் பற்றி பங்கி குறிப்பிடுகிறார். வாழ வழியற்று தனித்திருந்த சமயத்தில் வாமன் என்னிடத்தில் வந்து "கண்ணே... பொன்னே... உனக்கு

நா ஒரு கொறையும் வைக்கமாட்டேன். அப்படி இப்படி எல்லாம் சொல்லி என்னைக் கட்டிக்கிட்டான்"[6] என்று பங்கி தான் வாமனுடன் சேர்ந்து வாழ்வதைப் பற்றி கூறுகிறாள். ஆனால் வாமனே தன் தங்கைகளையும் திருமணம் செய்து வாழ வைக்காமல் அவர்களை விலைமகளாக மாற்றி விடுகிறான். "அடிக்கடி சினிமா ஸ்டார் போல் அலங்கரிச்சுட்டு டாக்ஸியில் இந்த நடைவெளி, கோவளம் என்னா, நொய்யார் டாம் என்னான்னு போவதைப் பார்த்திருப்பீங்களே... அவுங்களுக்கும் நல்ல சம்பாத்தியயம்"[7] என்று கற்பு நிலை தவறும் சூழலை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### திருமணம்

சமூக நடப்பியலில் குடும்பம் என்ற அமைப்பு ஏற்படுவதற்கு முதன்மையானது திருமணம். இது சமுதாயத்தில் நெடுங்காலமாக நடந்துவரும் நிகழ்வு. மனமொத்த இருவரைச் சமுதாயம் சேர்ந்து வாழ அனுமதிக்கும் முறை திருமணம் ஆகும். சமுதாயத்தில் ஆணும் பெண்ணும் புரிந்துகொண்டு பெற்றோர் உடன்பாட்டுடன் நடைபெறும் திருமணங்கள் மிகக்குறைவு. பெரும்பாலும் பெற்றோர், உறவினர்கள் உறுதி செய்து நடத்திவைக்கும் திருமணங்கள்தான் மிகுதி. இவ்விரு திருமணங்களிலும் முரண்பாடுகள் இருந்துகொண்டுதான் வருகின்றன.

அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் திருமணங்களைப் பற்றி நீல பத்மநாபன் கூறுகையில், அவர்களின் திருமணங்கள் பெற்றோரின் சம்மத்தோடு நடைபெறுவதாகக் கூறவில்லை. கூலித்தொழில் செய்பவர்கள் தங்களுடன் வேலை செய்பவர்களைத் தன் விருப்பப்படி மணந்து வாழ்கிறார்கள். பிடிக்கவில்லையெனில் பிரிந்து வேறொருவருடன் சேர்ந்து வாழ்கிறார்கள்.

இக்கதையிலும் இதுபோன்றே பங்கி முதலில் ஒரு போலீஸ்காரனைத் திருமணம் செய்துகொண்டு வாழ்கிறாள். சில வருடங்கள் கழித்து அவன் பங்கியைவிட்டு அவள் தங்கையுடன் வாழ்கிறான். பங்கியும் சில வருடங்கள் கழித்துத் தன் குழந்தையுடன் வேறொருவனைத் திருமணம் செய்து கொள்கிறாள். "என் தங்கச்சியைக் கட்டிக்கிட்டு அவளோடு போய்ச் சேர்ந்தான்" "ரெண்டு மூணு வருசம் நான் தனியாட்டுத்தான் இருந்தேன். இவன் என்னை வளைச்சுப் பிடிச்சுக்கிட்டான்."[8] என்று அடித்தட்டு மக்களின் வாழ்க்கையில் நடைபெறும் திருமண சீரழிவுகளை மிக நேர்த்தியாகப் படம் பிடித்து காட்டியுள்ளார்.

### குடிப்பழக்கம்

சமுதாயத்தில் தீயபழக்கங்களில் ஒன்று குடிப்பழக்கம். ஒருவனது குடிப்பழக்கம் அவனது குடியையே நாசமாக்கி விடுகிறது. ஆண்களின் இப்பழக்கத்தால் பெண்களே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். குழந்தைகளுக்குக்கூட உணவளிக்க இயலாத நிலையில், பத்து பாத்திரம் தேய்த்து, மனைவி வாங்கி வரும் பணத்தைக் கூட எடுத்து, மது குடித்து மூர்க்கனாய்த் திரும்பி வருபவர்கள் பலர். குடிப்பழக்கம் ஒருவனிடம் குடி புகுந்தால், அது கோபுரம் போல் உயர்ந்திருந்த குடும்பத்தைக் குட்டிசுவராக்கிவிட்டே விடைபெறும். ஆசிரியர் இக்கதையில் சாராயத் தொழிலைப் பற்றி நேர்த்தியாகக் கூறியுள்ளார். குடிப்பது ஆண்களே என்றாலும் அதனால் பாதிக்கப்படுவது பெண்களே. குடித்துவிட்டு பெண்களைத் தரக்குறைவாக பேசுவது, அனைவரும் பார்க்கையில் அவளை அடிப்பது போன்ற பல இன்னல்களுக்குப் பெண்கள் உள்ளாகின்றனர். ஆண்கள் குடித்துச் சீரழிகின்றார்கள் என்றால் இக்கதையில் வரும் வாமன் ஒருபடி மேல் சென்று தனது மனைவியைக் கொட்டுவடி பிஸினெஸ், (கள்ளச்சாராய) தொழிலில் ஈடுபடுத்துகிறான். அப்படி அவள் தொழில் செய்யும்போது பல முறை போலீஸிடம் மாட்டிக் கொள்கிறாள். இதனால் அவள்மேல் நிறைய

வழக்குகள் இருக்கின்றன. ஒருமுறை வாமன் குடித்துவிட்டு யாரிடமோ சண்டை போடுகிறான் என்பதை அறிந்த பங்கி, தன் துணைக்கு அம்மாவைக் கூட்டிக்கொண்டு நள்ளிரவில் செல்கிறாள். அவனைத் தேடி வந்ததற்கு அங்கேயே போட்டு அவளை அடிக்கிறான். அதுமட்டுமில்லாமல் அவள் அம்மாவையும் போட்டு அடிக்கிறான். போலிஸ் அவனைக் கைது செய்துகொண்டு செல்கையில் இவள்மீது உள்ள வெறியை வீட்டில் உள்ள அவளது துணிகளை எடுத்துக் கொளுத்தி விடுகிறான். "என் அம்மையையும் கூப்பிட்டு அங்கே போனேனோ இல்லையோ..... உங்களை இங்கே ஆரு வரச் சொன்னா... அப்படீன்னு சொல்லிட்டு என்னை மட்டும் இல்லே எங்க அம்மாவையும் அடிச்சு நொறுக்கிட்டான் இந்தப்பாவி"[9] இது போன்ற குடிகாரனால் குடும்பம் நாசமாகி சின்னாபின்னம் ஆகிவிடுகின்றது என்று கதையில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

### முடிவுரை

சமூக நலனில் அக்கறையுள்ள எழுத்தாளர்கள் தங்களது படைப்புகளில் சமூக அவலங்களைக் காட்டியுள்ளனர். நீல பத்மநாபன் வறுமை மனித குலத்தை எத்தகைய கீழ்நிலைக்குத் தள்ளுகிறது என்பதனைப் பல நிலைகளில் பாத்திரங்களின் வழியே சித்தரித்துள்ளார். குடிப்பழக்கத்தால் சமுதாயம் சீரழிவதையும் குடும்பங்கள் வீணாவதையும் நேர்த்தியாக கூறியுள்ளார். இச்சிறுகதை அடித்தட்டு மக்களின் வாழ்க்கைமுறைகளைப் படம் பிடித்துக் காட்டுவதோடு சமூகத்தின் அவலநிலையையும் புலப்படுத்துகிறது.

### குறிப்புகள்

1. சாமிநாத சர்மா, அரசியல் (அ) நீதியைப் பற்றி ஆராய்ச்சி, ப.111
2. செந்தமிழ் அறிஞர் மாருதி தாசன், நர்மதாவின் தமிழ் அகராதி, ப.337.
3. நாகம்மாவா? நீல. பத்மநாபான், ப. 54.
4. Marx Engels, On Literature and Art P.41
5. நாகம்மாவா? நீல. பத்மநாபன், ப. 54.
6. மேலது., ப. 55
7. மேலது., ப. 55
8. மேலது., ப. 54
9. மேலது., ப. 56